

ஒரு குட்டி மீனின் கதை






ஒரு குட்டி மீனின் கதை



“எப்படியாவது இங்கிருந்து வெளியே போயிடனும் னு” சொல்லிகிட்டே குட்டி மீன் வந்தது
“ஒரே குட்டையில் நீந்தி நீந்தி சலிப்பாயிடுச்சி
இனி நான் நீந்தினால் ஒரு பெரிய குட்டையில தான் நீந்துவேன் !”
இதை பெரிய பூனை ஒன்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தது.

“நான் உனக்கு உதவலாமா?” என்று
கேட்டது பூனை
“எனக்கு உலகத்தை சுத்தி பார்க்கணும்”
னு சொன்னது குட்டி மீன்
“அதோ அந்த மலையைத் தாண்டினால்
பூக்கள், மரங்கள், கடல் என்று இந்த
உலகத்தில் உள்ள எல்லா
அழகானவைகளும் இருக்கிறது” என்றது
பெரிய பூனை.






“கடலா ! ஆமாம் என் தாத்தா கடலை பற்றி என்னிடம் கூறியிருக்கிறார்” என்றது குட்டி மீன்

“என்னை அங்கு கூட்டிட்டு போவீங்களா ?”

“கண்டிப்பா ஆனால் முதலில் நான் வீட்டுக்கு போக வேண்டும் உன்னை கூட்டிட்டு போறதுக்கு ஒரு பையை எடுத்துட்டு வரணும்” என்றது பெரிய பூனை

“சரி சரி ஆனா சீக்கிரம் வந்துடுங்க” னு என்றது பூனையிடம் குட்டி மீன்.


ஒரு பெரிய நெகிழி பையை பூனை
கொண்டு வந்தது
அதை தண்ணியில் மூழ்க செய்தது
குட்டி பூனையும் அதில் நீந்தி ஏறி
கொண்டது
“ரொம்ப நன்றி, உங்களுக்கு கடன்
பட்டவனாயிட்டேன் னு” சொல்லுச்சு
குட்டி பூனை
“இதெல்லாம் ஒண்ணுமே இல்லை, இந்த
உதவி கூட பண்ணலைனா என்ன
நண்பன் னு” சொல்லிகிட்டே வாயில்
எச்சில் ஊற நின்றது.



வாயில் பையை கவ்வி கொண்டே
காட்டில் ஓடியது பூனை
என்ன அழகாக இருக்குது! அது தான்
பூக்களா ? னு கேட்டது குட்டி மீன்
இது என்ன பறவையா?
“ஆமாமா” என்று பல்லை
கடித்துக்கொண்டே சொன்னது பூனை
“இங்கே கொஞ்ச நேரம் நிக்க முடியுமா
னு” கேட்டது குட்டி மீன்
“முடியாது முடியாது” என்று அலறியது
பூனை
“கடல் எங்கே என்று கேட்டது” குட்டி
பூனை
“அதோ அந்த மலையை தாண்டி இருக்கு
இப்போ கொஞ்சம் சும்மா இருக்கியா? நீ
ரொம்ப தான் கேள்வி கேட்கிற ...”
“மன்னிச்சுடுங்க, இதெல்லாம் எனக்கு
புதுசா இருக்கு அதனால தான்”
னு பாவமா சொல்லுச்சு குட்டி மீன்



பெரிய பூனை மலை மேல வேகமாய் ஓடி
ஒரு அழுக்கான வீட்டுக்குள்ள புகுந்தது
“இங்க தான் கடல் இருக்கா ன்னு”
கேட்டுச்சு குட்டி மீன்
“உன்னுடைய டூர் இத்தோட முடிஞ்சிடுச்சு
னு” சொல்லுச்சு பூனை
அங்கிருந்த சட்டி பானை,
கரண்டியெல்லாம் பாத்து “இது தான் நீங்க
சொன்ன குட்டையா னு? பாவமா
கேட்டுச்சு குட்டி மீன்
“அட முட்டாள் மீனே, இது தான்
என்னுடைய சமையல் அறை
நான் உன்னை சமைச்சு சாப்பிட
போறேன்னு” சொன்னது பூனை.



குட்டி மீன் பூனை சொன்னதை கேட்டு நடு நடுங்கியது
“என்னை போய் எதுக்கு சாப்பிடறிங்க ன்னு" கேட்டது
பெரிய பூனை பாட்டு பாடிகிட்டே மீன் வருக்கிற சட்டியை தன் பாதத்தால் தடவியது
“உங்க தாத்தா பூனை மீன் கதையெல்லாம் சொன்னது கிடையாதான்னு” கேட்டுச்சு
“நீங்க தான் பூனையா? னு” குட்டி மீன் பயந்துகிட்டே கேட்டுச்சு
“ஆமா பெரிய பூனை நான் தான்
நான் உன்னை சாப்பிட போறேன், நீ ஒன்னும் எனக்கு முன் விரோதி இல்லை, ஆனா அது தான் இயற்கைன்னு”
சொல்லுச்சு பூனை.




“ஆனா நானே எலும்பும் தோலுமா இருக்கேன் என்னை போய் சாப்பிடுறீங்களே ன்னு” கூறியது குட்டி மீன்.


“அமைதி! நான் இந்த சமையல் புத்தகத்தை படிச்சுக்கிட்டு இருக்கேன்.

ஹ்ம் வேக வெச்சா நல்லா இருக்குமா இல்லை வறுத்தா நல்லா இருக்குமா இதோ கருவாடு ஊறுகாய், நல்லா மிளகாய் பொடி தடவி காய வெச்சி சாப்பிட்டா.

ஐயோ இப்போவே பசிக்குதே !

பெரிய பூனையாரே, கொஞ்சம் பொறுங்க! நான் வெறும் எலும்பு தான், வெறும் கொசுறு, எனக்கு பெரிய மீன் ஒன்னு தெரியும் அதை பிடிச்சு கொண்டு வந்தீங்கனா இந்த சமையலறையே நிரம்பிடும்ன்னு” சொல்லிச்சு குட்டி மீன்






பெரிய பூனை குட்டி மீனை இளக்காரமா பாத்துச்சு
“எங்க அந்த பெரிய மீன் இருக்குன்னு” கேட்டுது
“நான் இருந்த அதே குட்டையில தான், அதை ஒரு மாதம் முழுக்க நீங்க உட்கார்ந்து சாப்பிடலாம் னு சொல்லுச்சு” குட்டி மீன்
“என்னை திருப்பி அங்கே கொண்டு போயி விட்டா, நான் அதை பிடிச்சி தரேன்”
“எப்படி? னு” கேட்டுச்சு பெரிய பூனை
“உங்களிடம் கெச்சப் இருக்குதா னு கேட்டுச்சு” குட்டி மீன்

“இருந்தா என்ன பண்ணுவன்னு கேட்டுது” பூனை
“அந்த பெரிய மீனுக்கு கெச்சப் னா ரொம்ப புடிக்கும்”
“ஓ அப்படியா ? ன்னு” பூனை ஆர்வத்துடன் கேட்டுச்சு
“என்னை திருப்பி கொண்டு போங்க, ஒரு மெலிசான கயிறு, கொஞ்சம் கெச்சப் கொண்டு வாங்க, மத்ததை நான் பாதிக்கிறேன்” ன்னுச்சு குட்டி மீன்

பெரிய பூனை மீன் இருந்த பையையும்,
கெச்சப் வச்சிருந்த பையையும் எடுத்துகிட்டு
வேகமாய் குட்டையை நோக்கி ஓடிச்சாம்.



குட்டி மீன் இருந்த பையை
குட்டையில் இறக்கி வீட்டுச்சாம்
பூனை
பின்னர் மெலிதான கயிறில்
கெச்சப்பை சிறு பையில் கட்டி இறக்கி
விட்டதாம்.
குட்டி மீன் அப்பாடா னு வேகமாய்
பையை விட்டு வெளியே வந்துச்சாம்
எங்கே போனாலும் இந்த சுதந்திரம்
கிடைக்குமான்னு நினைச்சிகிட்டே
சுத்தி சுத்தி நீந்திச்சாம்



மேலே இருந்த பூனை கயிறை ஆட்டுச்சாம்
“ஏய் குட்டி மீனே, சீக்கிரம் அந்த பெரிய
மீனை கூட்டிகிட்டு மேல வரியா
எனக்கு ஒரே பசி.. பசியா இருக்கு னு”
கத்திச்சாம் பூனை.
குட்டி மீன் அந்த கயிறை இழுத்து
கொண்டு கிழே சென்றது
“சரி பூனையாரே இப்போ நல்லா இழுங்க”
என்று கத்திச்சு குட்டி மீன்
பூனையும் இழுத்து இழுத்து பாத்துச்சு.



ஒரு பெரிய மீனும் வெளியே வந்துச்சு, பாத்தா அது ஒரு பெரிய சைக்கிள்.
“ஏய் குட்டி மீனே என்னை ஏமாத்திட்டியா? ன்னு” கத்திச்சாம் பூனை.
குட்டி மீனுக்கு ஒரே சிரிப்பு, நீந்தி கொண்டே குட்டையின் நடுவில் வந்து பூனையை பார்த்து சொன்னது “ யோ பூனையாரே இதுவும் ஒரு பூனையும் மீனும் கதை தான், குட்டி மீனு கிட்டே பெரிய பூனையார் தோத்து போன கதை!

